விலை: 50.00
பக்க்ங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 169 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 23 வெள்ளிக்கிழமை (06.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## மனித புதைகுழிக்கு நீதி வேண்டி
## செம்மணியில் உறவுகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

- புதைகுழி அகழ்வுக்கு சர்வதேச கண்காணிப்பகம் தேவை என வலியுறுத்து.
- ஐ.நா மனித உரிமை ஆணையாளரை புதைகுழியை நேரடியாகப் பார்வையிட வலியுறுத்து.

(16ஆம் பக்கம் பார்க்க)



குருந்தூர்மலையில்
## கைதாகிய விவசாயிகள் விடுவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் கைதாகிய இரு விவசாயிகளும் விடுவிக்கப் பட்டதுடன் வழக்கும் தள்ளு படி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத் தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருந்தூர் மலை பகுதியில் விவசாய நட வடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டு

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு தாருங்கள்

ஈ.பி.டி.பியின் அலுவலகத்துக்குச் சென்று சி.வி.கே.சிவஞானம் டக்ளஸிடம் நேரில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கு தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு தாருங்கள் என்று ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு நேரில் சென்று டக்ளஸ் தேவானந்தாவிடம் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை முன்வைத்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



ஈ.பி.டி.பியுடன்
## பேச முனைபவர்கள் வெளியேறலாம்
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி. உடனோ அல்லது பேரினவாத சக்தி களோடு புதிய கட்டமைப்

15ஆம் பக்கம் பார்க்க

சர்வதேச நடைமுறைகளை
## செம்மணி புதைகுழி அகழ்வில் பின்பற்றுக
சர்வதேச மன்னிப்புச் சபை

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனித புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கைகள் சர்வதேச

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சியின் கோரிக்கை மக்கள் நலன் சார்ந்து பரிசீலனை
டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ கோரிக்கை கட்சி மட்டத்தில் மக்கள் நலன்சார்ந்து பரி சீலிக்கப்படும் என்று ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாய கம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் தலைவர்

02ஆம் பக்கம் பார்க்க

## 18 மண்டையோட்டுத் தொகுதி
செம்மணியில் இதுவரை அடையாளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மனி தப்புதைகுழியில்நேற்றுடன்18மண்டையோட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஐந்து மண்டையோட்டுத் தொகுதிகள் மீட்கப்பட் டுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சன் தெரி வித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க



## தியாகி பொன்.சிவகுமாரனின் 51ஆவது நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடு தலைப் போராட்ட வரலாற் றில் முதன்முதலில் சய னைட் உட்கொண்டு உயிர் துறந்த முதல் நபரான

15ஆம் பக்கம் பார்க்க

## தாளையடியில் அரச காணியை சுவீகரிக்கும் முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் அரச

16ஆம் பக்கம் பார்க்க

ஆவணங்களை உறுதிப்படுத்தினால்
## யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட நகைகள் வழங்கப்படும்
தவறினால் வடக்கு அபிவிருத்திக்குப் பயன்பாடு – பிமல்

(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தில் வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப் பட்ட தங்க நகைகளுக்குரிய ஆவணங்களை உரியவர் கள் உறுதிப்படுத்தினால் அவர் களுக்கு நகைகள் வழங்கப்

16ஆம் பக்கம் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60வது பிறந்தநாளும் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுதலும்

06.06.2025

## கந்தசாமி மனோகரன்



அரச சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, நேர்மையுடன் பல ஆண்டுகள், மக்களின் நலனுக்காகவும் குடும்பத்தின் நலனுக்காகவும் தன் நலன் கருதாது உழைத்த எங்கள் குடும்பத் தலைவன் கந்தசாமி மனோகரன் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
வராகியம்மன் கோவிலடி,
கொக்குவில்.

வாழ்த்துவோர்: குடும்பத்தினர்

(4469)


## நேர மாற்ற அறிவித்தல்

08.06.2025 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெறவிருந்த யா/இணுவில் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று மாலை 3.30 மணிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

- செயலாளர்

(C-3127)

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 - 04 - 1951



இறப்பு 03 - 06 - 2025

## திருமதி கமலாதேவி கிருஷ்ணபிள்ளை

யாழ்.நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கிருஷ்ணபிள்ளை கடந்த (03.06.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் கிருஷ்ணபிள்ளை (ஓய்வு பெற்ற நில அளவையாளர்) அவர்களின் மனைவியும் விஜிதா, ஜெயகாந்தன், காலஞ்சென்ற ஜெயரூபன் மற்றும் வினோதா ஆகியோரின் தாயாரும் கிரிதரன், கௌஷியா, ஜெயா, டினேஷ் ஆகியோரின் மாமியாரும் சகானா, அபிநயா, அபிஷா, பிரதோஷன், விகான், கவினா ஆகியோரின் பேர்த்தியும் விமலாதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (05.06.2025) வியாழக்கிழமை பி.ப 3.00 மணி முதல் இரவு 7.00 மணிவரையும் இன்று (06.06.2025) வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் வடமராட்சியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (07.06.2025) சனிக்கிழமை வைக்கப்பட்டு மறுநாள் (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Boc lane,
நெல்லியடிச் சந்தி,
கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
கணவர் - 071 482 0594
மகன் - 077 727 9114

(C-3121)

# ரணில், ராஜபக்ஷக்களை சிறையிலடைத்தே தீருவோம்

## அமைச்சர் சுனில் சூளுரை

(கொழும்பு)

ரணில், ராஜபக்ஷக்களை நிச்சயம் சிறையில் அடைப்போம் என தேசிய மக்கள் சக்தியின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான சுனில் ஹந்துனெத்தி பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

ராஜபக்ஷக்கள், ரணில் விக்கிரமசிங்க போன்றோரை சிறையில் அடைப்போம் என்பதனைத் தெளிவாகக் கூறுகின்றோம்.

சீனி வரி மோசடியின் போது நாமே அது குறித்து முறைப்பாட்டை மேற்கொண்டோம். ஆகவே இந்த விடயத்தை கைவிடமாட்டோம். நிச்சயம் வழக்கை முன்னெடுத்துச்செல்வோம்.

அத்துடன் வெள்ளைப்பூண்டு மோசடி, குறிப்பாக சதொச நிறுவனம் அரிசி இறக்குமதி செய்து அதில் பூச்சிகள் காணப்படுவதாகக் கூறி பியர் உற்பத்தி நிறுவனங்களுக்கு விற்பனை செய்தமை.

பசு மாடுகள் இறக்குமதியில் டொலர் கணக்கில் மோசடி செய்யப்பட்டமை, ஆயுர்வேத திணைக்களத்தின் அரச ஊழியர்கள் முன்னாள் அமைச்சர் ராஜிதவின் வீட்டில் பணிக்கமர்த்தப்பட்டமை உள்ளிட்ட அனைத்து மோசடிகள் தொடர்பிலும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

பிணை முறி மோசடி வழக்கும் முன்னெடுத்துச்செல்லப்பட வேண்டுமென உறுதிபடத் தெரிவித்துள்ளார். (ம-7)

## திடுதிடுக்கை வைரவருக்கு இன்று கும்பாபிசேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்கு திடுதிடுக்கை ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிசேகம் இன்று 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.52 மணிமுதல் காலை 7.22 மணிவரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது. (ந)


## தமிழரசு...

சி.வி.கே. சிவஞானம் அவர்களுடனான சந்திப்பினை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். அலுவலகத்திற்கு வருகை தந்த சி.வி.கே சிவஞானம் அவர்கள், வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 - 11 - 1936



இறப்பு 05 - 06 - 2025

## கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் – பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

துன்னாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (இரத்தினம்) அவர்கள் நேற்று (05.06.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அழகம்மா தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற அருளேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ஞானேஸ்வரி, வெங்கடாச்சலம், மங்களேஸ்வரி, செல்லம்மா, இராசன், வடிவேலு மற்றும் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவரூபன் (அசோகன்) மற்றும் சிவகுமார் (ஆசிரியர் - யா/விக்னேஸ்வரா கல்லூரி), பவானி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கோப்பாய்), சிவரஞ்சன் (பிரதம கணக்காளர் - மாவட்ட செயலகம், அநுராதபுரம்), சிவகாந்தன் (உரிமையாளர் - சென்றல் சேவிஸ்ரேசன், நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலச்சந்திரமூர்த்தி (ஆசிரிய வளவாளர் - வடமராட்சி கல்வி வலயம்), கோமதி (ஆசிரியர் - யா/விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை), நர்மதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேசசபை, கரவெட்டி), சீதாஞ்சலி ஆகியோரின் மாமனாரும் நிலக்ஷன் (பொறியியல் பீடம் - பேராதனை), ரஜீவன், அபிஷகன், லாசகன், லாஷனா, கஜானா, ஜனுசன், சுவஸ்திகா, ஆரூஷ், ஆதேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2025) வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு இந்து மயானத்திற்கு மு.ப 11.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(1200)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்கொல்லி போதை பாவனைக்கு அடிமையாகும் சிறுவர்கள்!

## சிறுவர் நன்நடத்தைப் பிரிவில் 36 சிறுவர்கள்

**(யாழ்ப்பாணம்)..............................**

**போதைப்பொருள் பாவனைக்கு அடிமையா வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 15-18 வரையான வயதுடைய 36 சிறுவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி நீதிமன்றத்தால் தம் மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். அவர்களில் சிறுமிகளும் உள் ளடங்குவதாகவும் சுட்டிக்காட்டினார்.**

உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனைக்கு அடிமை யானவர்களுக்கு மறுவாழ் வளிக்கும் நிலையத்தை ஆரம் பிப்பது தொடர்பான கலந்து ரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரண வன், மாணவர்களிடையே உயிர்கொல்லி போதை மாத்தி ரையின் பயன்பாடு அதிகரித் துள்ளது எனச் சுட்டிக்காட்டி னார். சந்தேகத்தில் அழைத்து வரப்படும் 10 மாணவர்களில் 7 பேருக்கு உயிர்கொல்லி போதை மாத்திரை பயன்படுத் தியமைக்கான பெறுபேறு கிடைக்கப்பெறுகின்றது எனவும் குறிப்பிட்டார்.

உயிர் கொல்லி போதை மாத்திரையை வடக்குக்கு கொண்டு வரும் மொத்த விற் பனை செய்யும் நிறுவனத்தி டமிருந்து அந்த மாத்திரைகள் விநியோகிக்கும் சங்கிலியை கண்காணித்து சோதனை செய் தாலே இதனை இலகுவாக கட்டுப்படுத்தக்கூடியதாக இருக் கும் எனக் குறிப்பிட்டார். இதனை உடனடியாக நடை முறைப்படுத்துமாறு யாழ்ப் பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்டச் செயலர், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ் ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உள வள ஆலோசகர்கள், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப் பாட்டுச் சபையின் இணைப் பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் நேரடியாகவும், வடக்கின் ஏனைய மாவட்டங்களின் மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ஆகியோர் "சூம்" செயலி ஊடாக இணைந்துகொண்டனர். (நி)

## பல்கலைக்கழக அனுமதிக்கு 90,000 விண்ணப்பங்கள்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகளின் அடிப்படையில், பல்கலைக்கழக அனுமதிக்காக இவ்வாண்டு 90,000 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இவை இணையவழி ஊடாக அனுப்பப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

பல்கலைக்கழகங்களில் சேர்வதற்காக விண்ணப் பிக்கும் கால அவகாசம் கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. இருப்பினும், ஏற்கனவே பதிவு செய்த மாணவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தமது விருப்ப வரிசையை மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இணையவழி மூலம் மேற் கொள்ள முடியும்.

தமது வரிசையை மாற்றிக் கொள்ளும் மாணவர்கள், புதுப் பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகலை பதிவுத் தபால் மூலம் ஆணைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் பல்கலைக் கழக மானியஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

## கம்மன்பிலவுக்கு எதிரான பயணத் தடை நீக்கம்

(கொழும்பு)

போலி ஆவணம் தயாரித்து அவுஸ்திரேலிய பிரஜை ஒரு வருக்குச் சொந்தமான பங்கு களை விற்பனை செய்து 21 மில்லியன் ரூபா மோசடி செய் ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பிறப் பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத் தடையை நீக்கி கொழு ம்பு மேல் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று வியா ழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.



இதன்போது நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி, போலி ஆவணம் தயாரித்து அவுஸ் திரேலிய பிரஜை ஒருவருக்குச் சொந்தமான பங்குகளை விற் பனை செய்து 21 மில்லியன் ரூபா மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வர்த்தகர் ஜயசிங்க ஆகியோர், கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றினால் விடுவித்து விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் உதயகம்மன்பில வுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை நீக்கப்படவில்லை.

இது தொடர்பில் பரிசீலித்த நீதவான், முன்னாள் அமைச் சர் உதயகம்மன்பிலவுக்கு எதி ராக பிறப்பிக்கப்பட்டுள்ள வெளி நாட்டு பயணத் தடையை நீக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு குடிவரவு மற்றும் குடிய கல்வுத் திணைக்கள அதிகாரிக ளுக்கு உத்தரவிட்டுள்ளார். (நி-8)

## தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலகத்தால் மர நடுகை





(அராலி)

தேசிய சுற்றாடல் வாரம் மற் றும் தேசிய சுற்றாடல் தின த்தை முன்னிட்டு நேற்றுக் காலை 9.15 மணிக்கு யாழ்ப் பாணம் பழைய பூங்கா வளா கத்தில் பயன்தரு மரங்களை நாட்டி பசுமை காடாக்கல் செயற் றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த செயற்றிட்டமானது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலை மையில் முன்னெடுக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜாவும் கலந்து கொண்டார். இந் நிகழ்வுக்கு 450 மரக்கன்றுகளை கிறீன் லேயர் நிறுவனத்தினர் இலவச மாக வழங்கினர். (நி-8-104)

## முகக்கவசங்களுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

வைரஸின் புதிய உலகளா விய மாறுபாடு குறித்த அச்சம் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக, கொவிட் அன்டிஜென் சோதனை கருவிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

தற்காலிக அடிப்படையில் பயன்படுத்த போதுமான அன்டி ஜென் கருவிகள் தற்போது கையிருப்பில் உள்ளன.

எனினும், அவசரகாலத் திட்டமாக அமைச்சகம் அதிக மான அன்டிஜன்களை இறக்கு மதி செய்யவுள்ளது.

புதிய மாறுபாட்டின் தீவிரம் குறைவாக இருந்தாலும், தயார் நிலைக்கு முக்கியம் என்பதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இந்த நிலையில், காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் வரும் நோயாளிகளின் கண்கா ணிப்பை அதிகரிக்க மருத்துவ மனைகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இருப்பினும், மருத்துவ நிபு ணர்கள் பொதுமக்களை பீதி அடைய வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, அரச நிறு வன ஊழியர்கள் முகக்கவசங் களை அணியுமாறு அறிவுறு த்த வேண்டிய அவசியமில்லை என்று, சுகாதார செயலாளர் தெரிவித்துள்ளார். அதேநேரம், முகக்கவசங்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## பெங்களூரு சம்பவம்; மன உளைச்சலில் கோலி



ஜூன் 4 புதன்கிழமை ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் 2025 இந்தியன் பிறீமியர் லீக் வெற்றிக் கொண்டாட்டத்தின் போது எம் சின்னசாமி மைதானத்திற்கு வெளியே ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கிய உயிர் இழப்பு மற்றும் காயங்களால் வார்த்தைகளால் பேச முடியாமல் திணறிப்போயிருப்பதாக விராட் கோலி தெரிவித்தார்.

இது குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கவலை வெளியிட்டுள்ள ஆர்.சி.பி அணியின் கௌரவ ஆட்டத்தை வழிநடத்திய கோலி, இந்த துயர சம்பவத்துக்காக தனது வருத்தத்தைத் வெளியிட்டார்.

"சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை, முற்றிலும் உடைந்துவிட்டேன்" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

"நிலைமை குறித்து அறிந்தவுடன், நாங்கள் உடனடியாக எங்கள் திட்டத்தை திருத்தி உள்ளூர் நிர்வாகத்தின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையைப் பின்பற்றினோம்," என்று ஆர்.சி.பி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் வெற்றி பெற்ற அணியைப் பார்க்க முயன்றபோது மைதானத்திற்கு வெளியே ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 11 பேர் உயிரிழந்தனர், 47 பேர் காயமடைந்தனர்.

35,000 பேர் அமரக் கூடிய மைதானத்திற்கு இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களை ஈர்த்த கொண்டாட்ட நிகழ்வு, வெளியே நடந்த சம்பவம் குறித்து ஏற்பாட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் வெறும் 20 நிமிடங்களுக்குக் குறைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பயிற்சியாளர் ஆண்டி ஃப்ளவர் மற்றும் பயிற்சியாளர் தினேஷ் கார்த்திக் உட்பட அனைத்து ஆர்.சி.பி வீரர்களும் அவர்களின் துணை ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

முன்னதாக விமான நிலையத்தில் அணியை வரவேற்ற கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமாரும் மாலையில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.ஐ.பி.எல் கிண்ணத்தை முதன்முறையாக அணியினர் அந்த இடத்திலேயே காட்சிப்படுத்தியபோது, மைதானத்திற்குள் இருந்த ஆர்.சி.பி ரசிகர்களிடம் விராட் கோலி உரையாற்றினார்.

எவ்வாறெனினும், நெரிசல் ஏற்பட்டதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகத் தொடங்கியபோதும், ஏற்பாட்டாளர்கள் எம்.சின்னசாமி மைதானத்தில் நிகழ்வைத் தொடர்ந்தது ஏன் என்பது குறித்து கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

கர்நாடக அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட முதற்கட்ட தகவல்களின்படி, மைதான வளாகத்திற்கு அருகில் உள்ள வடிகால் மீது வைக்கப்பட்டிருந்த தற்காலிக பலகை, அதன் மீது நின்றிருந்த மக்களின் எடையால் இடிந்து விழுந்தது.

இது திடீர் தூண்டியதுடன், கூட்ட நெரிசலுக்கு வழிவகுத்தது. (நி-8)

## சிறு வயது தோழியை கரம்பிடிக்கிறார் குல்தீப் யாதவ்

இந்திய கிரிக்கெட் வீரர் குல்தீப் யாதவ் தனது சிறுவயது தோழியான வன்ஷிகாவை கரம்பிடிக்கவுள்ளார்.

நேற்று முன்தினம் லக்னோவில் உள்ள ஒரு ஹோட்டலில் இருவருக்கும் எளிமையான முறையில் நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவரது நெருங்கிய உறவினர்கள் மற்றும் ரிங்கு சிங் உட்பட பல கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொண்டனர்.

இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு பின்பு இருவரும் திருமணம் செய்துகொள்வார்கள் என்று கூறப்படுகிறது. (நி-8)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3324

சுஜீபா




சாளின்





சுரதா




டியாரா




சுதனா




மேவின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நவநாள் வழிபாடுகள் கடந்த 4 ஆம் திகதி மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடனும் கொடியேற்றத்துடனும் வழிபாடுகள் ஆரம்பமாகியது. கொடியினை பங்குத்தந்தை அருட்தந்தை அ.டலிமா அடிகளாரினால் ஆசீர்வதித்து கொடி உயர ஏற்றி வைக்கப்பட்டதோடு திருப்பலி ஆரம்பமாகியது.

(படம்: சதீஸ்)

# வீட்டு வளாகத்தில் முதலை



(வவுனியா)

வவுனியா - கொக்குவெளி பகுதியில் வீட்டு வளாகத்தில் இருந்து 9 அடி நீளமான முதலை ஒன்று வன ஜீவ ராசிகள் திணைக்களத்தால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த முதலை வீட்டிற்கு பின்புறமுள்ள தோட்டப்பகுதியில் வீட்டின் உரிமையாளரால் அவதானிக்கப்பட்டது.

அதனைத் துரத்துவதற்கு முற்பட்ட போது குறித்த காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட கிணற்றில் முதலை வீழ்ந்துள்ளது.

இதனையடுத்து அவரால் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற அதிகாரிகள் கிணற்றில் இருந்து குறித்த முதலையைப் பிடித்துச் சென்றனர். (8-250)

# கடுமையான வெப்பநிலைப் பட்டியலில் இலங்கை-உலகவங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

நாளொன்றில் சராசரியாக ஆறு மணிநேரம் மக்கள் பாதுகாப்பாக வெளியில் பணிபுரிய முடியாத அளவுக்குக் கடுமையான வெப்பநிலையைக் கொண்ட சில தெற்காசிய நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளும் இந்தப் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

“ஆபத்திலிருந்து மீள்தன்மை : தெற்காசியாவில் மக்கள் மற்றும் நிறுவனங்களை மாற்றியமைக்க உதவுதல்” என்ற தலைப்பில் உலக வங்கி வெளியிட்டுள்ள புத்தகத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2050 ஆம் ஆண்டுக்குள் இந்தநிலை நாளொன்றுக்கு எட்டு முதல் ஒன்பது மணிநேரமாக உயர்வடையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

தெற்காசியாவின் வானிலை, தீவிர அதிகரிப்பை எதிர்கொள்கிறது எனவும் அங்குள்ள சுமார் 90 சதவீத மக்கள் கடுமையான வெப்பத்திற்கு ஆளாக நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2030 ஆம் ஆண்டுக்குள் ஐந்தில் ஒருவருக்கும் அதிகமானோர் கடுமையான வெள்ளப்பெருக்கு அபாயத்தில் இருப்பார்கள் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல், தெற்காசியாவில் சராசரியாக ஆண்டுக்கு 67 மில்லியன் மக்கள் இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளில் வெள்ளத்தால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை குறைந்து வந்தாலும், தீவிர வெப்பநிலையால் ஏற்படும் இறப்புகள் அதிகரித்துள்ளதாக அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (8)

# முல்லை மாவட்டத்தின் விலை நிர்ணய குழுக்கூட்டம்


(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான மாவட்ட விலை நிர்ணயக்குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கடந்த 4 ஆம் திகதி மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைப்பட்டியல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் குறித்த கலந்துரையாடலில் தொழிலாளர் கூலி மற்றும் வாகன வாடகை, கட்டட மூலப்பொருட்கள் தொடர்பான விலை நிர்ணயம் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், துறைசார்ந்த திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் என பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர். (8-299)



கிளிநொச்சி கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி கடந்த 4 ஆம் திகதி பிற்பகல் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் தர்மரத்தினம் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது மாணவர்களின் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

(படம்: தேவானந்தன்)

# இராசிபலன்

06.06.2025
வைகாசி 23, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முழுவதும்

அத்தம் முற்பகல் 8.55 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை

சந்திராஷ்டமம்- சதயம், பூரட்டாதி

வளவன்

**மேஷம்** வழிபாட்டில் ஆர்வம் கூடும், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**கடகம்** உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** மன அமைதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலை செய்வீர்கள்.

**மகரம்** உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், பயணங்களால் பலனுண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்

**ரிஷபம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**சிம்மம்** வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, நினைத்து நடந்து நிம்மதி கிடைக்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களின் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.

**கும்பம்** வாழ்க்கைத் துணை வழியே மனக்கசப்புக்கள் ஏற்பட்டு மறையும், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், வரவும் சமமாகும் நாள், தொழிலில் கவனம் தேவை, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**மிதுனம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** உறவினர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள்வர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், கௌரவமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

அகந்தையை விட அடக்கத்திற்கு இலாபம் அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றத்தின் போது

# பாரபட்சமன்றி செயற்படுங்கள்

## ஆசிரியர் சங்கம் கவனயீர்ப்பு போராட்டம்

**(அராலி) ----------------------**

**ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை தாய் மொழி ஆசிரியர் சங்கம் வடமாகாண ஆளுநர் தலைமை செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**




வடமாகாண ஆளுநர் வேதநாயகனிடம் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மஜகர் ஒன்றை கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

யாழில் இருந்து வெளி மாகாணங்களுக்கு ஆசிரியர் சேவையை செய்தவர்கள் மீண்டும் வெளி மாவட்டங்களுக்கு பணி இடமாற்றம் வழங்கப்படுகிறது.

ஆசிரியர்கள் மருத்துவ காரணங்களுக்காக தமது வெளி மாவட்ட இடமாற்றங்களை இரத்து செய்யுமாறு மேன்முறையீடு வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனை கருணை அடிப்படையில் பரிசீலனை செய்ய வேண்டும்.

வெளிமாவட்டம் செல்லாது பல ஆசிரியர்கள் தொடர்ந்தும் யாழ் மாவட்டத்தில் சேவையாற்றி வரும் நிலையில் பாரபட்சமின்றி இடமாற்றங்களை வழங்கவேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

குறித்த விடயங்கள் தொடர்பில் சாதகமாக பரிசீலனை செய்து விரைவில் அறிவிப்பதாக ஆளுநர் தெரிவித்ததாக போராட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர். (நி-8-104)



# சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் தேர்வுகள்

(சாவகச்சேரி)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் எதிர்வரும் 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் வழமையான பரீட்சை நிலையங்களில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குப் பின்னரும் கிடைக்கப் பெறாதவர்கள் சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் (077 719 7067) மற்றும் தேர்வுச் செயலாளர் (077 613 2176) ஆகியோரைத் தொடர்புகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8-30)

# புனித வேளாங்கன்னி ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித வேளாங்கன்னி அன்னை ஆலய வருடாந்த திருவிழா நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

நற்கருணை பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும் என ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (நி)



தமிழினத்தின் விடுதலைக்கான தியாகி பொன்னுத்துரை சிவகுமாரனின் 51 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 450 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 180 | 180 | 160 | 300 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 | 600 | 600 |
| தக்காளி | 600 | 650 | 600 | 550 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 280 | 240 |
| கோவா | 450 | 480 | 500 | 350 | 500 |
| கரட் | 800 | 750 | 600 | 650 | 800 |
| பூசணி | 120 | 180 | 160 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 400 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 150 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 800 | 700 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 200 | 300 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 350 | 430 | 450 | 350 | 450 |
| பீற்றூட் | 600 | 600 | 500 | 400 | 600 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 600 | 1000 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1200 | 1250 | 2000 |
| போஞ்சி | 600 | 550 | 600 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 80-150 | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 350 | 250 | 250 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 250 | 150 | 100-220 | 100-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 320 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| [illegible] | -- | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புக்கான அதிகபட்ச சில்லறை விலை விரைவில்

(கொழும்பு)

இந்த வாரத்திற்குள் உப்புக்கான அதிகபட்ச சில்லறை விலையை அறிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க எச்சரித்துள்ளார்.

இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட உப்பை அதிக விலைக்கு விற்க முயல்வதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.இது தொடர்பில் ஊடகங்களிடம் பேசிய அமைச்சர்,

உள்ளூர் சந்தையில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாகவே அரசாங்கம் உப்பு இறக்குமதி செய்ய அனுமதித்ததாகவும், இறக்குமதியாளர்கள் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு அதிக விலைக்கு உப்பு விற்பனை செய்வதற்கு அனுமதி இல்லை என்றும் கூறினார்.

அத்துடன், இறக்குமதியாளர்கள் ரூ.80 மதிப்புள்ள இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ உப்பை ரூ.250 இற்கு விற்க முயற்சிக்க வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# பாரிய விபத்தை தடுத்து
## பலரின் உயிரை காப்பாற்றிய நபர்

(கொழும்பு)

தென்னிலங்கையில் நேற்றுக் காலை ஏற்பட விருந்த ரயில் விபத்தை தனி நபராக தடுத்து நிறுத்திய ஒருவர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த நபரின் புத்தி சாதுரியமான செயற்பாடு காரணமாக பாரிய விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

பாணந்துறை ரயில் நிலையம் அருகே ரயில் பாதை உடைந்திருப்பதை அவதானித்துள்ளார்.

உடனடியாக அவர் தனது டி-ஷர்ட்டைக் கழற்றி, அதை எடுத்துக் கொண்டு, ரயிலை நிறுத்தும் நோக்கில் முன்னோக்கி ஓடியுள்ளார்.

இதன் காரணமாக ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான சாகரிக்கா ரயிலில் ஏற்படவிருந்த பெரிய விபத்தையும், பல விலைமதிப்பற்ற உயிர்களையும் காப்பாற்றியுள்ளார். (நி)

# டெங்கு,சிக்குன்குன்யா பரவல்
## அதிக பாதிப்பிற்குள்ளாகும் மாணவர்கள்
### சுகாதார அமைச்சு அறிவுறுத்து

(கொழும்பு)

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக நாடு முழுவதும் சிக்குன்குன்யா மற்றும் டெங்கு நோய் பரவும் ஆபத்து காணப்படுவதாகக் கல்வியமைச்சுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் கடந்த 31 ஆம் திகதி வரை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பதிவான டெங்கு நோயாளர்களில் அதிகளவானோர் 5 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களாகும் எனவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.இது தொடர்பாக விசேட அறிக்கையொன்றினையும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சபாநாயகரை சந்தித்தார்
## நேபாளத் தூதுவர் புர்ணா பஹதூர்





(கொழும்பு)

இலங்கைக்கான நேபாள தூதுவர் புர்ணா பஹதூர், மரியாதை நிமித்தமாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்து கொண்டார். (நி)

# சாரதிகளை கண்காணிக்க ஏ.ஐ.தொழில்நுட்பம்
## விரைவில் அறிமுகம்



(கொழும்பு)

பேருந்து விபத்துக்களை தடுக்கும் நோக்கில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்ய உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. போக்குவரத்து அமைச்சர் பிமல் ரட்நாயக்க இந்த விடயத்தை பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

பேருந்து சாரதிகள் நித்திரை கலக்கத்திற்கு உள்ளாவதனால் ஏற்படக் கூடிய விபத்துக்களை தவிர்க்க செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை பயன்படுத்த உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்காக விசேட கருவிகள் விரைவில் பொருத்தப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் இரண்டு மாதங்களில் சுமார் 40 பேருந்துகளில் இந்த செயற்கை நுண்ணறிவு கருவிகள் பொருத்தப்பட உள்ளன.

இந்தக் கருவிகள் மூலம் சாரதிகளுக்கு ஏற்படக்கூடிய நித்திரைக் கலக்கம் கண்காணிக்கப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் ஏனைய பேருந்துகளிலும் இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கண்காணிப்பு முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் பொதுப் போக்குவரத்துத்துறை மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)


**தென்.கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்.**

**வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்**

சங்க கிளை ரீதியாக வாக்களிக்க தகைமையுடைய வாக்காளர் பட்டியலும், இறந்த அங்கத்தவர் பட்டியலும் 31.03.2024 உடன் முடிவுறுத்தப்பட்டு கிளைகளில் 04.06.2025 ஆம் திகதி தொடக்கம் 19.06.2025 ஆம் திகதி வரையான காலப் பகுதி தமது காட்சிப்படுத்தப்படுகின்றது. இந்த வாக்காளர் பட்டியலில் தகுதியிருந்தும் தமது பெயர், முகவரி இடம்பெறாது இருந்தாலோ அல்லது ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் 20.06.2025 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் "செயலாளர், தென் கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்." என முகவரியிட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்து உறுதிப் படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**தென்.கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**கொடிகாமம்.**

(கி-3122)



**Kilinochchi District Secretariat**

INVITATION FOR BIDS (IFB) on Non Consulting Services-2026

**Maintenance of Passenger's Lift, Cleaning Services, Security services, Servicing of Vehicles, Fleet Insurance of Vehicles, Servicing of Air Conditioners & Maintenance of Photocopies**

The Chairman of Departmental Procurement committee of District Secretariat Kilinochchi invites sealed bids from interested eligible and qualified bidder for the above services. Particulars of the above could be obtained in the http://kilinochchi.dist.gov.lk/images/bid/bid-2024.pdf and if needed by 021 228 5352 during office hours.

1. A complete set of Bid documents will be issued from 09.06.2025 up to 27.09.2025 on working days from 9.00 a.m to 3.00.p.m
2. Bids will be received up to 10.00 a.m on 30.06.2025


(C-3120)

Chairman,
Departmental Procurement Committee,
District Secretariat,
Kilinochchi, T.P/ Fax-021 228 5352, Web http://kilinochchi.dist.gov.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 12 நாடுகளை சேர்ந்தவர்கள்
### அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தடை



(வோஷிங்டன்)
ஈரான், ஆப்கானிஸ்தான், மியன்மார் உட்பட 12 நாடுகளை சேர்ந்த மக்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தடை விதிக்கும் அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான், பர்மா, சாட், கொங்கோ குடியரசு, எக்குவடோரியல் கினியா, எரித்திரியா, ஹெய்ட்டி, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கே தடை விதிக்கப்பட்டுள்ளது.

கியுபா உட்பட பல நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொள்வது தொடர்பில் பல கட்டுப்பாடுகளையும் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவினதும் அதன் மக்களினதும் தேசிய பாதுகாப்பு நலன்கள் ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதிசெய்யும் எனது கடமையை நான் நிறைவேற்ற வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## உக்ரைனின் ட்ரோன் தாக்குதலுக்கு ரஷ்யா கடும் பதிலடி கொடுக்கும்
### சொல்கிறார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)
உக்ரைனின்ட்ரோன் தாக்குதலுக்கு ரஷ்யா கடும்பதிலடி கொடுக்கும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் மூன்று ஆண்டுகளை கடந்தும் தொடர்கிறது. இரு தரப்புக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சிகள் மேற்கொண்டார்.

ஆனால் இதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஒப்புக்கொள்ளவில்லை. இருப்பினும் சமீபத்தில் இரு நாடுகளும் பேச்சு நடத்தின. அதில் முடிவு ஏற்படவில்லை.

இந்நிலையில் 117 ட்ரோன்களை ஏவி, ரஷ்யாவின் விமானப்படை தளங்களை குறி வைத்து உக்ரைன் தாக்குதல் நடத்தியது. இதில் ரஷ்யாவின் 30 போர் விமானங்கள் சேதமடைந்தன. மேலும் ரஷ்யா - கிரீமியாவை இணைக்கும் பாலத்தையும் குண்டுகள் வைத்து தகர்த்தது.

இந்த சூழ்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசி வாயிலாக பேசினார். அதன்பின் வெளியிட்டுள்ள செய்தியில், "உக்ரைனின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கப்போவதாக ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்ததாக ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் இரு தரப்புக்கும் இடையே தற்போதைக்கு போர் நிறுத்தம் ஏற்பட சாத்தியமில்லை" என அவர் தெரிவித்தார். (நி-8)

## வடகொ



## மத்திய பிரதேசத்தில் கோர விபத்து
### 9 பேர் உயிரிழப்பு



மத்திய பிரதேச மாநிலத்தின் ஜபுவா மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட வாகன விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்தியப் பிரதேச மாநிலத்தை சேர்ந்தவர்கள் சிலர் உறவினரின் திருமண நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு வான் ஒன்றில் வீடு திரும்பி கொண்டிருந்த வேளை கட்டுப்பாட்டை இழந்த லொறியொன்று குறித்த வான் மீது மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கோர விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளதுடன் 2 பேர் பலத்த காயம் அடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நீண்ட நேரம் போராடி வானில் இருந்த உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதே வேளை விபத்தில் படுகாயமடைந்த இருவர் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

## காசாவில் நிரந்தர
### ஐ.நா பாதுகாப்பு சபையின்
### வீட்டோ அதிகாரத்தை பய

(வோஷிங்டன்)
காசாவில் உடனடி நிபந்தனையற்ற நிரந்தர யுத்த நிறுத்தத்தை கோரும் ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளது.

14 நாடுகள் இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ள நிலையிலேயே அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளது.

இஸ்ரேலை பாதுகாப்பதற்காக அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளமை இது ஐந்தாவது தடவையாகும்.




யுத்தநிறுத்த கோரிக்கைக்கும் ஹமாஸ் தன்னிடமுள்ள பணயக் கைதிகளை விடுதலை செய்வதற்கும் நேரடி தொடர்பில்லை என தெரிவித்து கடந்த நவம்பரில் ஜோ பைடன் நிர்வாகமும் யுத்த நிறுத்த தீர்மானத்திற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியிருந்தது.

காசாவின் நிலைமையை பேரழிவு என வர்ணித்து காசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை அழைப்பு விடுத்த தென்கொரியா



**(சியோல்)** ------------------

**வடகொரியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக தென்கொரியாவின் புதிய ஜனாதிபதி லி ஜே மியுங் தெரிவித்தார்.**

அதேவேளை, வட கொரியா அத்துமீறி செயற்பட்டால் அமெரிக்காவுடனான இராணுவ நட்பு மூலம் பதிலடி கொடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்றபின் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய லி ஜே மியுங், வடகொரியாவுடன் அமைதி பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.


இதையடுத்து அவர் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

தென்கொரியாவில் ஜனாதிபதியாக செயற்பட்ட யூன் சுக் இயோல் கடந்த ஆண்டு டிசம்பரில் இராணுவ அவசர நிலை அறிவித்தார்.

இதையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இடைக்கால ஜனாதிபதியாக ஹான் டக் சூ நியமிக்கப்பட்டிருந்த நிலையில் தென்கொரியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது.

இதில் ஜனநாயக கட்சி வேட்பாளர் லி ஜே மியுங் வெற்றி பெற்றார். (நி-8)

# ...ர யுத்த நிறுத்தம்
## ...ன் தீர்மானத்திற்கு எதிராக ...யன்படுத்திய அமெரிக்கா



கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிராகரித்ததன் மூலம் அமெரிக்கா ஒரு வலுவான செய்தியை தெரிவித்துள்ளது என அந்த நாட்டின் இராஜாங்க செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிற்கும் ஹமாசிற்கும் இடையில் ஒரு தவறான ஒரு சமாந்திரத்தை வரையும் இஸ்ரேல் தன்னை தானே பாதுகாப்பதற்காக உள்ள உரிமையை புறக்கணிக்கும் எந்த தீர்வையும் அமெரிக்கா ஏற்றுக் கொள்ளாது என தெரிவித்துள்ள அவர் ஐ.நாவில் தொடர்ந்தும் அமெரிக்கா இஸ்ரேலிற்கு ஆதரவாகயிருக்கும் என தெரிவித்துள்ளார். (நி-8)

...விற்குள் மனிதாபிமான உதவிகள் உடனடியாக சென்றடைவதற்காக அனைத்து கட்டுப்பாடுகளையும் உடனடியாக நீக்க வேண்டும், என கோரும் இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக பிரிட்டனும் பிரான்ஸிம் வாக்களித்திருந்தன.

இஸ்ரேலை இலக்கு வைத்து பாதுகாப்புச் சபையில்

# 2ஆம் உலகப்போரில் வீசப்பட்ட 3 குண்டுகள் ஜேர்மனியில் கண்டெடுப்பு

(பேர்லின்)


ஜேர்மனியின்கோலோன் நகரில், இரண்டாம் உலகப்போரின் போது வீசப்பட்ட 3 வெடிக்காத குண்டுகள் பொதுப் பாதுகாப்புத்துறை, பொலிஸார் மற்றும் வெடிகுண்டு மீட்புக் குழுவினரால் வெற்றிகரமாக செயலிழக்கப்பட்டுள்ளன.

குறித்த குண்டுகள் Deutz பகுதியில் உள்ள கப்பல்துறை அருகே கடந்த திங்கட்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன. குறித்த பகுதியில் வீடுகள், கடைகள், பள்ளிகள், ஹோட்டல்கள், ஒரு பெரிய மருத்துவமனை மற்றும் ஒரு முக்கியமான ரயில் நிலையம் காணப்படுவதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் பொது மக்களின் உதவியுடன் குறித்த குண்டுகள் செயலிழக்கப்பட்டுள்ளன. இந் நடவடிக்கைக்காக குறித்த பகுதியை விட்டு சுமார் 20,000 மக்கள் அப்பகுதியை விட்டு வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கையானது இரண்டாம் உலகப்போருக்குப் பின் இடம்பெற்ற மிகப்பெரிய மீட்பு நடவடிக்கையாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கோலோன் நகரம், இரண்டாம் உலகப்போரில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார தொண்டர்களுக்கு சம்பளம் வழங்கப்படுமா?

## அர்ச்சுனா எம்.பி கேள்வி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அரச நியமனம் வழங்காது 3 வருட காலத்துக்கு சுகாதார தொண்டர்களாக அமர்த்தப்பட்டவர்களுக்கான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமா? என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கேள்வியெழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி. சுகாதார தொண்டர்களாக அமர்த்தப்பட்டவர்கள் தன்னார்வ முறையில் பணியாற்றியுள்ளனர் என ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல. வடக்கு. கிழக்கு மற்றும் ஏனைய வைத்திய சாலைகளிலும் கூட இந்தப் பிரச்சினை காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்காலத்தில் தாம் வேலை வாய்ப்புக்களை வழங்குகின்ற வேளை அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும். ஆனால் அவர்களுக்கான கடந்த காலத்துக்கான சம்பளத்தை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:பட்டதாரி. Executive Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15595

பிறப்பு:1999-இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி-பா-23 3/4
உயரம்:5'8"
தகைமை/தொழில்-MBBS(Final year)
எதிர்பார்ப்பு: Teacher,Doctor
தொ.இ: B/15597

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
12 இல் செவ்
கி-பா- 03
உயரம்:5'11"
தகைமை/தொழில்:Engineer(Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15599

பிறப்பு: 1999-இந்து
நட்சத்திரம்:பூராடம்
உயரம்:5'9"
தகைமை/தொழில்: MBBS(Final year)
எதிர்பார்ப்பு: Engineer
தொ.இ: B/15600

பிறப்பு:1983 -இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா- 32
உயரம்:5'3"
தகைமை/தொழில்: O/L.சொந்தமில் ஆட்டோ சேவை.
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15017

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா-24
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:. Civil Engineering, DO
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/10704

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:விசாகம் 1 இல் செவ்
கி-பா-59
உயரம்:5'4"
தகைமை/தொழில்-MLS
எதிர்பார்ப்பு:Doctor, Engineer
தொ.இ: G/14271

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-உத்திராடம்
கி.பா-17 1 இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு. தகுந்த வரன்
தொ.இ: G/12110

பிறப்பு -1996 -இந்து
நட்சத்திரம் - திருவாதிரை
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:இயன்மருத்துவர்
எதிர்பார்ப்பு: படித்த ஆண்
தொ.இ: G/14252

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா:17 1/4 7இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSMS பட்டதாரி
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம். வெளிநாடு
தொ.இ: G/13588

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 389

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## பணமும் குணமும்

இந்த உலகிலே பணம் பெரிதா? குணம் பெரிதா? அப்படி என்று ஒரு கேள்வி கேட்டால்உடனே எல்லோரும்சொல்லும்பதில்என்ன தெரியுமா? "பணம் என்ன சேர் பணம் அது இன்றைக்கு வரும் நாளைக்குப் போகும். குணம்தான் சேர் பெரிது, அப்படி என்பார்கள். இப்படிப் பேசுவதாலே தான் நாம் ஒரு பெரிய தவறு செய்கின்றோம். அதாவது பணத்தையும் குணத்தையும் சம்பந்தப்படுத்துவதே ஒரு பெரிய தவறு. ஏன் என்றால், குணம் என்பது நமக்கு உள்ளே இருக்கின்ற ஒரு விடயம் பணம் என்பது நமது உடம்புக்கு வெளியே இருக்கின்ற ஒரு விடயம். "பணம்"என்பது ஏதோ நமக்கு வேண்டாத ஒன்று அப்படிஎன்பது போல சிலர் தத்துவம் பேசுவார்கள், செல்வமே பாவம்என்றும்சிலர்சொல்லுவார்கள்இதெல்லாம் அர்த்தமில்லாத ஒரு தத்துவம் என்கிறார் ஒரு பெரியவர் (ரஜனிஷ்) . இந்த உலகத்திலே நாம் நன்றாக வாழ வேண்டும் என்றால் அதற்கு முக்கியமாக பணம் தேவை.

பணத்தின் மேல் ஆசை வைக்காதீர்கள் எளிய வாழ்க்கை வாழுங்கள் அதுதான் உன்னதமான வாழ்க்கை. அப்படி என்று சொல்லி சிலர் வறுமையை உன்னதப்படுத்திவிடுகின்றார்கள். அது மிகத் தவறான ஒரு தத்துவம் . முறையான வழியிலே பணத்தை சம்பாதியுங்கள். செல்வத்தை சேருங்கள். நீங்களும் செழிப்பாக வாழுங்கள். இந்த நாட்டையும் செழிப்பானதாக மாற்றுங்கள். அப்படி என்று சொல்வதுதான் நியாயம். அதை விட்டு விட்டு மிகவும் சுலபமான வழியாக வறுமையை உன்னதப் படுத்தி விடுகின்றோம் அது மிகவும் தவறு. வறுமையை மிகவும் பெருமையாக சொல்லும் பழக்கம் நம்மிடம் இருக்கு!

"சேர் இப்பொழுதும் குடிசை வீட்டிலேதான் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அப்படி என்கின்றது ஒரு பெருமையா?

ஒவ்வொருத்தரும் தங்களுடைய வாழ்க்கையை எப்பவும் உற்சாகமாக வைத்துக் கொள்ள வேண்டும்.அதற்குத் தேவையான செல்வத்தைத் திரட்ட வேண்டும்.

அதை விட்டுவிட்டு எளிமையாக இருக்கிறேன் என்று சொல்லி வறுமையை ஒரு பெருமையான விடயமாக நமக்கு வழிகாட்டுவது மிகவும் வேதனையான ஒரு விடயம். வறுமையை உன்னதமாக ஆக்குபவர்கள் என்ன செய்கின்றார்கள் தெரியுமா?

செல்வத்தையும் செல்வம் சேர்க்க உழைக்கிறதையும் அது என்னமோ ஒரு பெரிய பாவகாரியம் மாதிரி பேசுகிறார்கள்.

அதை கேட்கும் போது எங்களுக்கு என்ன தோன்றுகின்றது.

செல்வமே பாவத்தினுடைய விளைவு போல இருக்கிறது அப்படி என்று நினைக்க ஆரம்பித்து விடுகின்றோம்.

பசியுடன் இருக்கும் ஒருத்தன் அடுத்த வேளை சாப்பாட்டை பற்றித்தான் யோசித்துக் கொண்டிருப்பான்.இப்பொழுது நாம் சாப்பிடுவதற்கு என்ன வழி என்பதில் தான் அவனுடைய மனமும் ஆத்மாவும் இருக்கும்.

உடம்பினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அளவுக்கு செல்வத்தை முதலிலே சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அதன் பின்பு நான் யார்? என்று உங்களுக்கு உள்ளே தேடிக்கொண்டு போக முடியும். பசியாலே துடித்துக் கொண்டிருக்கின்ற ஒருத்தனைப் பார்த்து என்னப்பா செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டால்.

"நான் இப்பொழுது என் உள் ஒளியைத் தேடிக்கொண்டிருக்கின்றேன்" அப்படி என்றா சொல்லுவான்? வயிற்றுக்கு ஏதாவது வழி இருந்தா சொல்லுங்கள் என்பான். அதனாலே புறவிவகாரத்தையும் அகவிவகாரத்தையும் சம்பந்தப்படுத்திக் கொண்டிருக்கக் கூடாது.

பணத்தை தானம் செய்தால் சொர்க்கம் கிடைத்துவிடுமா? கிடைக்காது! பணம் புறவிவகாரம்! மதம் சொர்க்கம்! இதெல்லாம் அகவிவகாரங்கள். பணத்தைக் கொடுத்து சொர்க்கத்தை வாங்கிவிட முடியாது என்பதற்கு ஒரு கதை உண்டு.

ஒரு பெரிய மனிதன் இருந்தான். வசதியான ஆள் ஆனால் கஞ்சன்.

செலவு செய்யமாட்டான். அவன் ஒரு நாள் செத்துப்போய் விட்டான். உடனே சொர்க்கலோகத்து வாசல் கதவு பக்கமாகப் போய் நின்றான்.

"நான் ஒரு பெரிய மனிதன் வந்திருக்கிறேன். சொர்க்க வாசல் கதவைத் திறந்து விடு" என்றான் அங்கே நின்று கொண்டிருந்த சித்திரகுப்தனிடம். அவன் யோசித்தான். உடனே இவன் தன்னுடைய சட்டைப் பையிலே இருந்து பத்து ரூபா பணத்தை எடுத்து கொடுத்தான்.

"இந்தா இதை வைத்துக் கொள் . தேநீர் சாப்பிடு கதவை திறந்துவிடு!" என்றான். சித்திரகுப்தன் சிரித்துக் கொண்டே "இதெல்லாம் பூலோக நடைமுறைகள் லஞ்சம் கொடுக்கிறது. கதவைத் திறக்கச் சொல்வது எல்லாம் அந்த வழிமுறைகள் எல்லாம் இங்கே எடுபடாது. சொர்க்கத்திலே நுழையத் தகுதி பெறக்கூடிய அளவுக்கு நீ யாருக்கு என்ன நன்மை செய்திருக்கிறாய் " என்று கேட்டான்.

இவன் யோசித்துப் பார்த்துவிட்டு ஒரு கிழவிக்கு ஒருநாள் 10 ரூபா தானம் கொடுத்திருக்கிறேன். பின்பு ஒரு நாள் ஒரு அனாதைப் பையனுக்கு ஐந்து ரூபா கொடுத்திருக்கிறேன்" அப்படி என்றான். உடனே சித்திரகுப்தன் தன் பக்கத்திலே இருந்த இன்னொருத்தனிடம் யோசனை கேட்டான்.

இந்த ஆள் 15 ரூபா தருமம் செய்திருக்கிறான். என்ன செய்யலாம்? என்று கேட்டான். அதற்கு அவன்.

"அந்த 15 ரூபாவை இப் பொழுது இவனிடம் திருப்பி கொடுத்துவிட்டு இவனை நரகத்துக்கே அனுப்பி வைத்துவிடலாம் " அப்படி என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் சிலை திறப்பு



(வவுனியா)

வவுனியா - ஓமந்தை கிராம அலுவலர் வளாகத்தினுள் திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் கிராம அலுவலர் நாகராஜா ஸ்ரீதரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் கலந்துகொண்டு சிலையை திறந்து வைத்தார்.

அன்னம்மா அறக் கட்டளையின் 10 ஆவது ஆண்டை முன்னிட்டு அதன் ஸ்தாபகர் அருட்பணி சிற்றம்பலம் கமலகண்ணன் அவர்களால் குறித்த சிலை நிறுவப்பட்டது.

இந் நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் கு.பாலசண்முகன், தெற்கு பிரதேச சபையின் செயலாளர் சு.தெர்ஜனா, ஓமந்தை மத்தியகல்லூரி அதிபர் செ.பவேந்திரன், பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (8)

# மருந்தாளர் சங்கத்தின் பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் அவதி!

(தருமபுரம்)

அரசாங்க மருந்தாளர் சங்கம் மேற்கொண்டுள்ள ஒரு நாள் பணிப்புறக்ணிப்பு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலும் நோயாளர்கள் அசௌகரியம்.



1.பதவி உயர்வு முறை தொடர்பான பிரச்சனையை அனைவருக்கும் நியாயமாக தீர்க்கப்படவில்லை, இதன் விளைவாக கணிசமான எண்ணிக்கையிலான மூத்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு இழப்பு ஏற்பட்டது.

2.வகுப்பு I அதிகாரிகளுக்கான முன்மொழியப்பட்ட செயல்திறன் தடை தொடர்பாக சுகாதார அமைச்சகத்தால் பரிந்துரைக்கப்பட்ட மேலாண்மைப் பயிற்சியை நடத்துவதற்கு ஒப்புதல் வழங்கத் தவறியது.

3.பட்டதாரி பயிற்சிகளுக்கு வேறு பெயர்களைப் பயன்படுத்த ஒப்புதல் அளித்தல்.

4.பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பல்கலைக் கழக மானியக் குழுவின் தகுதிப் பட்டியலைப் பயன்படுத்த ஒப்புதல் வழங்கத் தவறியது. குறித்த கோரிக்கைகளை முன் வைத்து ஒரு நாள் பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர். நேற்றைய தினம் மாதாந்த சிகிச்சை தினமாகையால் சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் சிகிச்சை பெற்று மருந்து பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர் நோக்கி இருந்தனர். குறித்த பணிப் புறக்களிப்பு நாடு முழுவதும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (8-316)

# பீடியாபாம் - செட்டிக்குளம் பேருந்து சேவை ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம், பீடியாபாம் பகுதியில் இருந்து இ.போ.சபை பேருந்து சேவையை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா பீடியாபாம் பகுதியில் இருந்து செட்டிகுளம் செல்லும் மாணவர்கள் மற்றும் நோயாளர்கள், தோட்டச் செய்கையாளர்கள் ஆகியோர் செட்டிகுளம் மற்றும் வவுனியா போன்ற பகுதிகளுக்கு போக்கு வரத்து செய்ய முடியாத நிலையில் காணப்பட்டனர்.

இந் நிலையில் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கோரிக்கைக்கு அமைவாக பீடியாபாம் பகுதியில் இருந்து காலை 6.45 இற்கு புறப்படும் வகையில் பேருந்து சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்திலும் இவ்வாறான மேலதிக சேவைகள் இடம்பெறும். சாலைகளுக்கு மேலதிக பேருந்துகள் அரசாங்கத்தால் வழங்கப்படும். மக்களுக்கு முன்னுரிமையளித்து எமது வேலைகள் இடம்பெறும். போக்குவரத்து அமைச்சர் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவித்தார். (8-250)

# கூட்டமாக வந்த யானைகள்



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் 20 இற்கும் மேற்பட்ட யானை கூட்டம் வீதிக்கு வந்தமையால் அவ் வீதியில் பயணித்தவர்கள் அசௌகரியங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

கடந்த 4 ஆம் திகதி மாலை 5.45 மணியளவில் வீதிக்கு வந்த யானைகள் சுமார் 15 நிமிடங்கள் அப்பகுதியில் நடமாடிவிட்டு பின்னர் காட்டுக்குள் சென்றன.

யானைகள் வீதிக்கு வந்தமையால் அச்சமடைந்த பயணிகள் வந்த திசையை நோக்கித் திரும்பிச்சென்றனர். அண்மைக் காலமாக புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதிகளில் யானை வீதிக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-299)

# மன்னாரில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் மற்றும் இராணுவத்தினருக்கு இடையிலான நல்லிணக்கத்தை அதிகரிக்கும் முகமாக தள்ளாடி 54 ஆவது காலாட்படை பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வன்னி பிராந்திய கட்டளையிடும் தளபதி கரப்பந்தாட்ட வெற்றிகிண்ண இறுதி நிகழ்வு மன்னார் நகர சபை உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெற்றது

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய அணிகளும் அதே நேரம் இரண்டு இராணுவ அணி என இடம் பெற்ற குறித்த சுற்றுப் போட்டியில் மன்னார் பிரதேச செயலக அணி மற்றும் தள்ளாடி இராணுவ B அணியும் இறுதி போட்டிக்கு தெரிவாகிய நிலையில் அவர்களுக்கான போட்டி இடம் பெற்றது

குறித்த போட்டியில் மன்னார் பிரதேச செயலக அணியை இராணுவ அணியினர் வென்று 50000 ரூபா பணப்பரிசு மற்றும் பதக்கங்களையும் அதே நேரம் வன்னி கட்டளையிடும் தளபதி வெற்றி கிண்ணத்தையும் தமதாக்கி கொண்டனர்.இரண்டாம் இடம் பெற்ற மன்னார் பிரதேச செயலக அணிக்கு 25000 ரூபா பணப் பரிசும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வன்னி பிராந்திய தலைமை கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் பிரதீப் குலதுங்க, சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலாளர்கள், இராணுவ தளபதிகள்,உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் முகமாகவும் அதே நேரம் இராணுவம், பொதுமக்கள், அரச அதிகாரிகளுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக பல்வேறு நிகழ்வுகள் இராணுவத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் வைத்திய அதிகாரி பிரிவின்கீழ் உள்ள மாங்குளம் பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரி பிரிவின்கீழ் உள்ள புதிய கொலணி மாங்குளம் பகுதியில் டெங்கு அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து குறித்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்தது.

மாங்குளம் ஆதார வைத்தியசாலை வளாகம் மற்றும் மாங்குளம் புதிய கொலணி, பழைய கொலணி பகுதியில் உள்ள வீட்டு வளாகங்களும் பரிசோதிக்கப்பட்டிருந்தன. அப்போது டெங்கு நுளம்பு பரவும் அபாயம் உள்ள இடங்களை கொண்ட வளாகங்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட்டனர். மற்றும் உரிய வளாக உரிமையாளர்களுக்கு பொது சுகாதார பரிசோதகர்களினால் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டன.

மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் நதிருசன் தலைமையில் குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தன.(8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 792





என்னைக் கண்ட இடத்தில் கொன்று விடச் சதிகாரக் கூட்டத்தார் வெகு நாளைக்கு முன்பே தீர்மானித்திருந்தார்கள் அது எனக்குத் தெரியும். என் கையிலோ ஆயுதம் இல்லை, ஆகையால் ஓட்டம் பிடிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. தேவராளனும் தொடர்ந்து ஓடி வந்து கொண்டிருந்தான். அடர்ந்த காடாக இருந்தபடியால் அவனால் என்னைப் பிடிக்க முடியவில்லை. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு என்னை அவன் தொடர்ந்து வரவில்லை என்று தோன்றியது.

வேட்டையைக் கைவிட்டு விட்டான் என்று எண்ணிக் காட்டிலிருந்து இனி ராஜ பாட்டைக்குப் போய் விடலாம் என்று உத்தேசித்தேன். சற்றுத் தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. அதில் ஒரு சிறிய விளக்கு மினுக்கு மினுக்கு என்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தக் குடிசையில் இராஜபாட்டைக்கு வழி கேட்கலாம் என்று நினைத்து அதை அணுகினேன். சற்றுத் தூரத்திலிருந்து உற்றுப் பார்த்தேன் நல்ல வேளையாய்ப் போயிற்று. குடிசை வாசலில் தேவராளன் நின்று கொண்டிருந்தான். ஒரு பெண் பிள்ளையும், ஒரு நாயும் அவன் அருகில் நின்றார்கள். தேவராளன் பெண் பிள்ளையிடம் ஏதோ சொல்லிவிட்டு நாயை அழைத்துக் கொண்டு மறுபடியும் புறப்பட்டான். நாய் நான் நின்ற திசையை நோக்கிக் குரைத்தது.

ஆகவே அபாயம் இன்னும் அதிகமாயிற்று. இராஜபாட்டைக்குப் போகும் உத்தேசத்தைக் கைவிட்டு காட்டு வழியிலேயே புகுந்து ஓடி வந்தேன். நாய் அடிக்கடி குரைத்துக் கொண்டு வந்தபடியால் அவர்கள் எங்கே வருகிறார்கள் என்பதை நான் ஊகிக்க முடிந்தது. ஓடி வந்து கொண்டிருக்கும் போதே மூளையும் வேலை செய்து கொண்டிருந்தது. இரவு முழுவதும் காட்டில் சுற்றிக் கொண்டிருப்பது அசாத்தியம். எப்படியும் அவர்கள் வந்து பிடித்து விடுவார்கள். கையில் வேலுடன் கூடிய தேவராளனையும் வாயில் பல்லுடன் கூடிய வேட்டை நாயையும் ஏக காலத்தில் சமாளிப்பது சுலபம் அல்ல. அச்சமயத்தில் இப்பெரிய மாளிகையின் மதில் சுவர் தெரிந்தது.

மதிலில் ஏறி உள்ளே குதித்துவிட்டால் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன், அப்படியே ஏறிவிட்டேன். அச்சமயம் நீ அரண்மனை மேல் மாடத்தில் ஓடி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன், நீ மதில் ஏறி வெளியே குதிப்பதற்குத்தான் ஓடி வருகிறாய் என்று தெரிந்து கொண்டு மறுபடியும் கீழே குதித்தேன். நாம் இரண்டு பேருமாகச் சேர்ந்து தேவராளனையும் அவனுடைய நாயையும் சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

இதற்குள் நாய் குரைக்கும் சத்தம் கேட்கவே பக்கத்திலிருந்த மரத்தின் மேலே ஏறிக் கொண்டேன். நாயும் தேவராளனும் நான் ஏறி இருந்த மரத்தை அணுகித்தான் வந்தார்கள். அதற்குள் நீ மதில் சுவரிலிருந்து இறங்கியது தேவராளரின் கண்ணில் பட்டது போலும். நாயையும் அழைத்துக் கொண்டு நீ இறங்குமிடத்தை நெருங்கினான். பிறகு நடந்ததெல்லாம் உனக்குத் தெரியும்."

"வைஷ்ணவரே! விதியின் வலிமையைப் பற்றி உமது அபிப்ராயம் என்ன?" என்று வந்தியத்தேவன் கேட்டான். "இது என்ன கேள்வி? திடீரென்று விதியின் பேரில் உன்னுடைய எண்ணம் போனது, ஏன்?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிறு துளி



நல்ல வெயில், லொரிகளும் பேருந்துகளும் சென்றும், வந்தும் கொண்டிருந்த அந்த தார் சாலையில் வயதான மனிதர் ஒருவர் தள்ளாடி தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தார். தாகம் வாட்டியது, நா வறட்சியால் தண்ணீர் எங்காவது கிடைக்குமா என்று கண்கள் அலை பாய தேடிக் கொண்டிருந்தார். சற்று தூரத்தில் ஒரு பழக் கடை கண்ணில் பட அங்கு சென்றவர் கொஞ்சம் தாகத்திற்கு தண்ணீர் கிடைக்குமா? என்று கேட்டார்.

தண்ணீர் இல்லை, காசு இருந்தால் ஜூஸ் தருகிறேன் என்று கடைக்காரர் சொன்னார். ஐயா என்னிடம் ஜூஸ் வாங்கும் அளவுக்கு பணம் இல்லை, கொஞ்சம் தண்ணீர் கொடுத்தால் போதும் நான் போய் விடுகிறேன்.

அன்று கடைக்காரருக்கு சரியாக வியாபாரம் ஆகவில்லையோ என்னவோ, அந்த கோபத்தில் இருந்திருப்பார் போலிருக்கிறது, அதெல்லாம் கிடையாது, போங்கள் இங்கிருந்து என்று விரட்டி விட்டார். பெரியவர் தம்பி தாகத்திற்கு தண்ணீர் தர மறுக்கிறாய், எதையும் வியாபாரமாய் நினைக்காதே. இது ஒரு புண்ணிய காரியமல்லவா? தண்ணீர் கிடையாது போங்கள் இங்கிருந்து, மீண்டும் விரட்டி விட்டார். அப்பொழுது கிழிந்த ஆடையுடன் ஒரு சிறுவன் இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான், ஐயா, என் வீட்டிற்கு வாருங்கள், தண்ணீர் தருகிறேன் என்று சொல்லி அவரை அழைத்து சென்றான்.

அவன் வீடு என்று சொன்னது சாலையோரத்தில் போடப்பட்டிருந்த ஒரு பந்தல், அவ்வளவுதான். அது கித்தான் பையால் மூடப்பட்டு அதற்குள் ஒரு பெண் இருந்தாள்.

இந்த சிறுவன் அந்த பெண்ணிடம் அம்மா இவருக்கு ரொம்ப தாகமாய் இருக்கிறது, கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் என்றான். அந்த பெண் நாமோ இங்கு பிச்சை எடுப்பவர்கள், நம்மிடம் தண்ணீர் வாங்கி குடிப்பாரா என்று கேட்டாள். ஏன் அம்மா அப்படி கேட்கிறீர்கள்? அந்த பெரியவர் கேட்டார். ஐயா நாங்கள் இந்த வீதியோரம் தங்கியிருப்பவர்கள். நன்றாக இருந்தவர்கள்தான், இவன் அப்பா இறந்து விட்டதால் கிராமத்தை விட்டு பிழைப்பதற்கு இங்கு வந்தோம், இவனோ சிறுவன், எனக்கோ உடல் நிலை சரியில்லாத நிலைமை.

அதனால், வறுமையின் காரணமாய் பிச்சை எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களிடம் ஒரு உடைந்த அலுமினிய குவளை மட்டுமே இருக்கிறது, அது போக ஒரு பிளாஸ்டிக் குடம் இருக்கிறது. அதற்குள்தான் தண்ணீர் இருக்கிறது. அந்த குவளையில் கொடுத்தால் குடிப்பீர்களா?.

அம்மா தாராளமாய் கொடு குடிக்கிறேன் என்று சொல்லி அந்த பெண் கொடுத்த குவளை தண்ணீரை பிடித்து குடித்தார். மெல்ல தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு அம்மா மிக்க நன்றி, இந்த உதவிக்கு நான் ஏதாவது செய்ய வேண்டும், ஆனால் என்னிடம் ஏதாவது இருக்கிறதா பார்க்கிறேன். தனது சட்டைப் பை, உடைகள் எல்லாவற்றையும் தடவி பார்த்தார். ஒரு ரூபாய் நாணயம் இருந்தது, அதை எடுத்தவர் தம்பி என்னிடம் ஒரே ஒரு ரூபாய் மட்டுமே இருக்கிறது.

ஆனால் இந்த ஒரு ரூபாய் பிச்சை காசு என்று நினைத்து விடாதே. இந்த காசு மூலம் உன் வாழ்க்கையே மாறி விட வாய்ப்பு உண்டு. என்று சொல்லி அந்த காசை பையனிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து நடந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிய முடிதல் வேண்டும். நல்லவை எண்ணல் வேண்டும். – பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பதவிபடுத்தும் பாட்டை பார்த்தீர்களோ மக்காள்

நடந்தது ஒரு உள்ளூராட்சி சபைத் தேர்தல் மட்டுமே. அந்தத் தேர்தலில் நம் மக்கள் அருமையான தீர்ப்பை வழங்கினர்.

அவ்வளவுதான் எங்களின் அரசியல் புதைகுழிகள் தோண்டப்படுகின்றன. அடேங்கப்பா! செம்மணிப் புதைகுழி எந்த மட்டு. அரசியல் திருகுதாளங்கள், பதவி ஆசையின் உச்சங்கள், கொள்கை இல்லாத கோமாளித்தனங்கள், ஐயகோ! யாரைப் பிடித்தேனும் பதவியைப் பெற்றுவிடவேணும் என்ற அங்கலாய்ப்புகள் இங்கே சொல்லிமாளா.

ஆம், இப்போது எங்கள் தமிழ் அரசியல் எப்பேற்பட்டது என்பது புரிகிறதா?

துரோகிகள் என்று ஏசியவர்கள், ஒட்டுக் குழுக்கள் என்று கோசம் போட்டவர்கள், எங்கள் இனத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்று கத்தியவர்கள் எல்லோரும் இப்போது எங்கே? புரிகிறதா எம் இனமே எம் சனமே.

பரவாயில்லை நாங்களேனும் இவர்களை அறிந்தோம். ஆனால் எம் இனம் வாழ வேண்டும் என்பதற்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த மாவீரர்களை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். இப்படியொரு தமிழ் அரசியலை அவர்கள் கனவிலும் நினைத்திருப்பரா அந்தோ அநியாயம்.

ஓ! மாவீரர்களே! ஒருபோதும் நீங்கள் விழித்து விடாதீர்கள். மீண்டும் முளைத்து விடாதீர்கள். ஏனென்றால் உங்களின் தியாகம் இங்கு ஏலம் இடப்படுகிறது.

அதோ! உங்கள் கல்லறையில் மௌனித்து நின்றவர்கள் – முள்ளிவாய்க்காலில் விழுந்து கும்பிட்டவர்கள் இப்போது தங்களின் சுயரூப தரிசனத்தைக் காட்டி நிற்கிறார்கள்.

இவர்களா? எம் தமிழினத்தின் உரிமைக்காகக் குரல் கொடுப்பார்கள். ஒருபோதும் இல்லை.

உள்ளூராட்சி சபைகளைத் தமது அதிகாரத்துக்குள் கொண்டு வருவதற்காக என்னவெல்லாம் நடக்கிறது பார்த்தீர்களா?

இதை நாம் கூறும்போது, ஒற்றுமைப்படுவதில் என்ன தவறு என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம். அவ்வாறு கேட்பதிலும் தவறில்லை.

ஆனால் நீங்கள் ஒற்றுமைப்படுகின்ற தரப்புகள் தொடர்பில் நீங்கள் ஏலவே கூறியவை இப்போதும் எம் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

அப்படியானால், உங்களுக்குத் தமிழ் மக்கள் வெறும் பகடைக் காய்கள் மட்டுமே. மற்றும்படி அரசியல் பதவிகளே உங்களுக்குத் தேவையானவை.

ஆம், பதவி கிடைக்குமென்றால் எவருடனும் நாம் இணங்கிப் போவோம் என்பது தானே உங்களின் கொள்கை.

இது கூடத் தவறில்லை. ஆனால் உங்களைப் புனிதர்களாக – தமிழர்களின் மீட்பர்களாகக் காட்டிக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றினீர்களே நீங்கள் மட்டும் வீடனர்களை விடக் குறைந்தவர்களா என்ன?

# அரசியல்வாதிகளிடம் ஏற்பட்ட மாற்றத்தை அரச அதிகாரிகளிடமும் எதிர்பார்க்கின்றோம்

## நீங்களாக மாறுங்கள் இல்லையேல் நாம் மாற்றுவோம்

### ஜனாதிபதி அநுர எச்சரிக்கை

(கேகாலை)

அரசியல்வாதிகளிடத்தே ஏற்பட்டுள்ள மாற்றத்தைப்போல இலஞ்சம், ஊழல் போன்ற பழைய பழக்கவழக்கங்களை விடுத்து அரச அதிகாரிகள் மாற வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கேகாலையில் நேற்று இடம்பெற்ற உலக சுற்றாடல் தின தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி,

தற்போது அரசியல் அதிகாரம் ஊழல் அற்ற நிலைக்கு மேம்படுத்தப்பட்டிருந்தாலும் சில அரச அதிகாரிகள் பழைய பழக்கவழக்கங்களிலிருந்து மாறத் தவறிவிட்டனர்.

போலியான கடவுச்சீட்டுகளைத் தயாரித்த அதிகாரிகளுக்கு எதிராக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களமும் பொருட்களை விடுவித்த அதிகாரிகளுக்கு எதிராக சுங்கத் துறையும் பல்வேறு விதி மீறல்களைச் செய்த அதிகாரிகளுக்கு எதிராக சுரங்கப் பணியகமும் குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளது.

அதனால்தான் பழைய முறைகேடான பழக்கங்களை விட்டு விட்டுப் புதிய பழக்கங்களைத் தொடங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறுகிறோம். நான் மீண்டும் கூறுகிறேன், மாறுங்கள், இல்லையெனில் நாம் மாற்றுவோம் என்றார். (ம-7)

# பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மிக விரைவில் மீள இயக்கப்படும்

### தலைவர் நேசராஜன் நம்பிக்கை

(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மிக விரைவில் மீள இயக்கப்படும் எனப் பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டெட்டின் தலைவர் நேசராஜன் நம்பிக்கை வெளியிட்டார்.

பரந்தன் இரசாயனத் தொழிற்ச்சாலையை மீள விரைவாக இயக்குவது குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் நோக்குடன் பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனி லிமிடெட்டின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்றைய தினம் தொழிற்சாலைக்குக் களவிஜயம் மேற்கொண்டிருந்தனர். அதனையடுத்து ஊடகங்களிடம் இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், 1954 பரந்தன் பக்ரி என்ற பெயரில் ஆரம்பித்த குறித்த இரசாயன தொழிற்சாலையானது பின்பு பரந்தன் கெமிக்கல் கோப்பிரேசன் என்ற பெயரில் இயங்கி வந்தது. நாட்டின் யுத்த நிலைமை காரணமாக 1983ம் ஆண்டுக்குப் பின்பு இயங்கமுடியவில்லை. இருப்பினும் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து தொழிற்சாலையை விரைவாக ஆரம்பிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த இரசாயனத் தொழிற்சாலை மூலம் குளோரின் மற்றும் Caustic Soda உற்பத்தி செய்யப்படவுள்ளது.

தேசிய அளவில் நீர் சுத்திகரிப்புக்கு குளோரின் இறக்குமதி செய்யப்படுகின்றது. இங்கு அதனை உற்பத்தி செய்வதன் மூலம் இறக்குமதியை நிறுத்தி இலாப மீட்ட முடியும் எனத் தெரிவித்தார். (ம-7)

### சுகாதார எச்சரிக்கைப் படங்களின்றி

## புகையிலை சார் பொருட்கள் விற்ற வர்த்தகருக்குத் தண்டம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழைப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் உரிய சுகாதார எச்சரிக்கைப்படக் காட்சிப் படுத்தல்களின்றி புகையிலை சார் பொருட்களை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் தேசிய மது மற்றும் புகையிலை அதிகார சபையின் நியமங்களைக் கடைப்பிடிக்கத் தவறியமைக்காக வர்த்தகருக்கு எதிராக நேற்று குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிமன்றம் வர்த்தகரினை எச்சரித்ததோடு தண்டமும் விதித்துள்ளது. (ம-7)

## புலோலி கிழக்கு அ.த.கவின்

### வருடாந்த பரிசில் தினம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையின் 2025ம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழாவானது இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் விஜயகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில்,

பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்), திருமதி. ஜனனி லதர்சன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

## தமிழீழ வைப்பக நகைகளை பொதுவுடமையாக்க வேண்டாம்

### செல்வம் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளின் தமிழீழ வைப்பகத்தில் இருந்து இராணுவத்தினரால் மீட்கப்பட்ட தங்க நகைகளை, உறுதி ஆதாரத்துடன் இருக்கும் மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நகைகளை அரசு பொதுவுடமையாக்கக்கூடாது என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது குறித்து பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (5) அவர் மேலும் உரையாற்றிய தாவது,


ராஜபக்ஷி காலத்தில் நடந்த போரின் போது விடுதலைப் புலிகளின் வைப்பகத்தில் இருந்து மீட்கப்பட்ட நகைகள் காணாமல் போய்விட்டன. பணம் மற்றும் உடமைகள் காணாமல் போயுள்ளன என்று பேசப்படும் நிலையில், இந்த அரசாங்கம் இராணுவத்தினர் வசமிருந்த நகைகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நல்லவொரு விடயத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இதை நாங்கள் பாராட்ட வேண்டும்.

எவ்வாறாயினும் இந்த விடயத்தில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். அதாவது இந்த நகைகள் சாதாரண மக்களுடையவையே. அவர்கள் அந்த வைப்பகத்தில் நகைகளை வைத்தமைக்கான அத்தாட்சிகளை பலரும் வைத்திருக்கின்றனர். என்னிடமும் அவர்கள் வழங்கியுள்ளனர். அதனைச் சபையில் சமர்ப்பிக்கவும் முடியும். ஆதாரத்துடன் இருக்கும் மக்களிடம் அவை செல்ல வேண்டும். அவற்றைப் பொதுவுடமையாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி விடக்கூடாது என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்-2025

## எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும்!



கிரகநிலை - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி, ராகு - பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், புதன் - களத்திர ஸ்தானத்தில் குரு - அஷ்டம ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 02-06-2025 அன்று புதன் பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-06-2025 அன்று செவ்வாய் பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-06-2025 அன்று சூரிய பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 22-06-2025 அன்று புதன் பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29-06-2025 அன்று சுக்கிர பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** உங்கள் திறமைகளை மூலதனமாக கொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் தனுசு இராசியினரே! நீங்கள் எடுக்கும் காரியங்களில் குறுக்கு வழியை பின்பற்ற மாட்டீர்கள். இந்த மாதம் எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும். எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் அதிகரிக்கும். எதிலும் வெற்றியும் சந்தோஷத்தையும் தரும். பணம் வருவது அதிகரிக்கும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகளில் தீர்வு கிடைக்கும்.

தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ்நிலையில் உள்ளவர்களால் நன்மை உண்டாகும். தேவையான சரக்குகள் கையிருப்பு இருக்கும். துணிச்சலாக முயற்சிகள் மேற்கொண்டு வியாபாரத்தை விரிவு படுத்துவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். மேலதிகாரிகளால் நன்மை ஏற் படும்.

குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த இறுக்க நிலை மாறும். பெண்கள் காரியங்களை துணிச்சலாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் நடந்து முடியும்.

கலைத்துறையினருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவீர்கள். ஆடை, ஆபரணங்கள் சேரும். விளை




யாட்டுத் துறையில் உள்ளவர்களுக்கு பரிசும், பாராட்டுதல்களும் கிடைக்கும். அரசியல்துறையினருக்கு பயணங்களால் மகிழ்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். நிலம், வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்புகள் கைகூடி வரும். நீதிமன்ற வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். வேதாந்த விடயங்களில் நாட்டம் அதிகரிக்கும்.

மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற துணிச்சலாக முயற்சிகளை மேற் கொள்வீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் சாதகமாக நடக்கும்.

**மூலம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழிலை விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அதற்கு தேவையான பண உதவியும் கிடைக்க பெறுவீர்கள். ஆனால் போட்டிகள் பற்றிய கவலைகள் தோன்றும். சமாளிக்க முயல்வீர்கள்.

**பூராடம்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலக பணியை சிறப்பாக செய்வார்கள். புதிய தொடர்புகள் மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். ஆன்மிகப் பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**உத்திராடம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகன இலாபம் ஏற்படும். தந்தையுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வெளிதொடர்புகளில் எச்சரிக்கை தேவை. எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்க சூழ்நிலை ஏற்படும். செலவுகளை குறைக்க திட்டமிடுவது நல்லது. கௌரவம் உயரும்.

பரிகாரம்: சித்தர்களை வணங்கி வர மனதில் தைரியம் கூடும். காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 1, 27, 28, 29

**அதிஷ்ட தினங்கள்:** 12, 13

## நிதானம் காரிய வெற்றியைத் தரும்!



கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி, ராகு - சுக ஸ்தானத்தில் சுக்கிரன் - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், புதன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு - களத்திர ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - அஷ்டம ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 02-06-2025 அன்று புதன் பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-06-2025 அன்று செவ்வாய் பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-06-2025 அன்று சூரிய பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 22-06-2025 அன்று புதன் பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29-06-2025 அன்று சுக்கிர பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** உழைப்புக்கு அஞ்சாத உறுதியான மனம் கொண்ட மகர இராசியினரே! நீங்கள் எந்த செயலையும் நேரத்தில் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். இந்த மாதம் எதையும் யோசித்து செய்வது நன்மை தரும். கோபமாக பேசுவதை தவிர்த்து நிதானமாக பேசி செயற்படுவது காரிய வெற்றிக்கு உதவும். எந்த விடயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாகலாம். கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்கள் செல்லும்போதும் வாகனங்களில் செல்லும் போதும் கவனம் தேவை. வேலை செய்யும் இடத்தில் இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நன்மை தரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் சச்சரவுகள் தோன்றலாம். அதற்கு இடம் கொடுக்காமல் நடந்து கொள்வது நன்மை தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. குழந்தைகளிடம் இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் நீங்கும். பெண்கள் கோபத்தை தவிர்த்து நிதானமாக பேசுவது காரிய வெற்றிக்கு உதவும். யோசித்து செய்யும் வேலைகள் சாதகமாக முடியும்.

கலைத்துறையினருக்கு பாராட்டுகள் வரும். வெளிநாடு பயணங்களும் இனிதே அமையும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உறவுநிலை சிறக்க விட்டுக் கொடுத்தல் அவசியமாகிறது. கூட்டுத்தொழிலில் அதிகம் அக்கறை தேவை. அரசியல் துறையினருக்கு நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சினைகள் விலகும். திடீர் செலவுகள் ஏற்படும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அயராது




பாடுபடுபவர்கள் அதிகப்பயன் பெறுவார் கள். பயணத்தால் அனுகூலம் உண்டு.

மாணவர்கள் திட்டமிட்டு பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும். எதிலும் அவசரம் காட்டாமல் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது.

**உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எடுத்துக் கொண்ட காரியங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செயலாற்றுவது முன்னேற்றத்திற்கு உதவும். சிக்கலான பிரச்சினைகளையும் எளிதாக தீர்ப்பீர்கள். பணவரத்து இருக்கும். திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும்.

**திருவோணம்:** இந்த மாதம் பேச்சின் இனிமை, சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் எல்லாம் கைகூடும் பயணங்கள் ஏற்படலாம். ஆன்மிக பணிகளில் நாட்டம் செல்லும். உங்களது பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டும். ஓடர்கள் கிடைக்க அலைய வேண்டி இருக்கும். பண வரத்து இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது. புதிய பதவிகள் தொடர்பான விடயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் சனீஸ்வரபகவானை நல்லெண்ணை தீபம் ஏற்றி வணங்கி வர எல்லாக் காரியங்களும் வெற்றியடையும். உடல் ஆரோக்கியம் பெறும்.

**அதிஷ்ட கிழமைகள்:** செவ்வாய், புதன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 2, 3, 4, 30

**அதிஷ்ட தினங்கள்:** 14, 15, 16

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதாகிய...

விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக வழக்கு இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபர்களான விவசாயிகள் இருவரையும் வழக்கில் இருந்து விடுவித்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் தனது கட்டளையில், குறித்த சந்தேகநபர்கள் மீது வழக்கைத் தொடர்ந்து நடத்தக்கூடிய அடிப்படை முகாந்திரங்கள் இல்லை எனவும், குறித்த பிரதேசம் இன்னமும் தொல்பொருள் திணைக்களத்துக்குரிய பிரதேசம் என வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்பதை வழக்குத் தொடுனர் தரப்பே ஏற்றுக் கொண்டதையும் விசேடமாகக் குறிப்பிட்டார். (ம-7,28,299)

## பேச முனைபவர்...

பின் அனுமதியின்றி யாராவது பேசவோ செயற்படவோ முனைந்தால் அவர்கள் தாமாகவே வெளியேறலாம் அல்லது விலக்கப்படுவார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் டக்ளஸ் தேவானந்தாவுடன் சித்தார்த்தன் தொடர்பு கொண்டமை தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியப் பேரவை சுயாதீனமாகவும் இயங்கும். நாற்காலிகளை அலங்கரிப்பது நோக்கமல்ல. சித்தார்த்தன் டக்ளஸை அணுகியது எம்முடன் கூட்டில் உள்ள எவருக்கும் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தியாகி...

பொன்.சிவகுமாரனின் 51ஆவது நினைவுதினம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

உரும்பிராயில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அவருடைய சிலைக்கு நேற்றுக் காலை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் நிரோஸ் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது போராளிகள் நலன் புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன், குயிலன், தனுபன் ஆகியோர் பொன். சிவகுமாரனின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## தமிழரசுக் கட்சி...

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.அலுவலகத்திற்கு வருகை தந்த சிவஞானம், வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ கோரிக்கை கட்சி மட்டத்தில் மக்கள் நலன்சார்ந்து பரிசீலிக்கப்படும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானத்துடனான சந்திப்பினைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே செயலாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார். (ம-7,33,104)

## 18 மண்டை...

யாழ் - செம்மணி , சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நேற்று இரண்டாம் கட்டத்தின் நான்காம் நாள் அகழ்வுப் பணி இடம்பெற்றது.

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராசாவின் கண்காணிப்பின் கீழ் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி இடம்பெற்றது.

இதன்போது சித்துப்பாத்தி மனிதப் புதை குழியில் நேற்று டன் 18 மண்டையோட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஐந்து மண்டையோட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மனிதப் புதைகுழி வழக்கு இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் திறந்தமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ம-7,33)

## செம்மணி...

நடைமுறைகளை பின்பற்றி முன்னெடுக்கப்படும் என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசிய அலுவலகம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசிய பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது,

செம்மணியின் இரண்டாவது மனித புதைகுழியை தோண்டும் நடவடிக்கைகளை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளதால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பத்தவர்களிற்கு நீதியை, உண்மையை வழங்குவதை நோக்கிய முக்கிய நடவடிக்கையாக இது அமையலாம். எனினும் இதற்கு சர்வதேச நடைமுறைகளைப் பின்பற்றி அகழ்வு இடம் பெறுவது அவசியம்.

மனித புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகளிற்கு இலங்கை அதிகாரிகள் உரிய நிதியை ஒதுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களுக்கும் ஊடகங்களிற்கும் அந்தப் பகுதிக்குச் செல்வதற்கான போதிய அனுமதியை வழங்கி, இந்த விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் விசாரணைகளின்போது இடைக்காலத்தில் தெரியவந்துள்ள விடயங்கள் குறித்து தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தால், மனித புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகள் வெளிப்படையான விதத்தில் இடம்பெறும் என்று தெரிவித்துள்ளது. (ம-7)

## போதைவஸ்துடன் இருவர் அதிரடிக் கைது

(கம்பஹா)

கம்பஹா சீதுவைப் பிரதேசத்தில் போதை மாத்திரைகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 4450 போதை மாத்திரைகளும் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கார் என்பன பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.(ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 5851 — S 9 0 8 7 1 0
அத சம்பத — S 8 7 1 0 — சீட்டிழுப்பு இலக்கம் 0426
தன நிதானய — திகதி - 2025.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் - 1881 — H 20 38 45 59 H — 37558
மெகா பவர் — திகதி 05/06/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2199 — I 20 07 11 19 70
ஜய — திகதி 2025.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 119 — K 7 5 4 1
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4093 — சீட்டிழுப்பு திகதி 05.06.2025 — K 17 18 25 62 — K
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.06.05 — சீட்டிழுப்பு இலக்கம் 1160 — 05 35 41 58 — 41433 — 29
சுபிரி தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 05.06.2025 — வெற்றி வாரம் 559 — K 4 6 8 1 3 2 — 87267 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,608,105.60
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2825 — சீட்டிழுப்பு திகதி 2025.06.05 — தினம் வியாழக்கிழமை — 25 41 45 71 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,423,160.80
சனிதா — திகதி 05.06.2025 — வெற்றி வாரம் 4986 — 30 36 39 73 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,246,656.80 — 78914
சசிரி — வெற்றி வாரம் 697 — 05.06.2025 — வியாழக்கிழமை — 27 29 46 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4537 — சீட்டிழுப்பு திகதி 05.06.2025 — தினம் வியாழக்கிழமை — 18 19 29 51 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,258,516.40 — 154276
கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — N 13 14 25 38 62 — 2001 — 05.06.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.577,186,511.20
அட கோடிபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2651 — சீட்டிழுப்பு திகதி 2025.06.05 — 01 21 30 66 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,378,984.00 — 667244


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு தேசிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது

## யாழ். மாநகர சபை உறுப்பினர் கபிலன்

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்க தேசிய மக்கள் சக்தி ஆதரவளிக்கவுள்ளது என்ற தகவலில் எவ்வித உண்மையும் இல்லை என தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் சு.கபிலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கத் தேசிய மக்கள் சக்தி ஆதரவளிக்கவுள்ளதாக, சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் காலத்திலும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக மக்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்பியவர்கள் தேர்தலிற்குப் பின்னரான ஆட்சிமைப்பிற்குட்பட்ட இக்காலத்திலும் மக்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்பிவருகிறார்கள்.

எமது மக்களை வதந்திகள் மூலமாக வழிநடாத்தி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்றதாகக் கருதும் எந்தவொரு சுயநல அரசியல் கட்சிகளுடனும் கூட்டுச் சேரவோ? இணைந்து பயணிக்கவோ? தேசிய மக்கள் சக்தியினராகிய நாம் முன்வரப்போவதில்லை என்பதை எமது மக்களிற்கு பொறுப்புடன் அறியத்தருகின்றோம்.

எமது மக்கள் வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் எமக்கு வாக்களித்த மக்கள், வாக்களிக்காத மக்கள் என்ற பேதமின்றி ஒவ்வொருவரும் சமூகம் சார்ந்தும், பிராந்தியம் சார்ந்தும் உயர்பெற வலுவான எதிரணியாகச் செயற்படுவோம் எனத் தெரிவித்த கபிலன், நாளுக்குநாள் வெளிவரும் போலியான தகவல்களால் எமது மக்கள் அரசியல் களம் சார்ந்து அசௌகரியங்களிற்குட்படக்கூடாது என்று தெரிவித்தார். (ம-7)

## மனித புதைகுழி...

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரியும், மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் சர்வதேசக் கண்காணிப்புடனும், சர்வதேச நியமங்களைப் பின்பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப் பட்டது.

யாழ். அரியாலை, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் இந்தப்புதைகுழி பாரியதாக இருக்கலாம் எனப் பலரும் அச்சம் வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், வடக்கு - கிழக்கு வலிந்துகாணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் நேற்று காலை 10 மணியளவில் செம்மணி வளைவுக்கு அருகில் செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரியும், புதைகுழி அகழ்வுப் பணிகள் சர்வதேசக் கண்காணிப்புடனும்,சர்வதேச நியமங்களைப் பின்பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“செம்மணிப் புதைகுழிக்கு நீதி வேண்டும், மறைக்காதே மறைக்காதே புதைகுழிகளை மறைக்காதே, எங்கே எங்கேஉறவுகள் எங்கே, இனப்படுகொலைக்குச்சர்வதேச விசாரணை வேண்டும் என எழுதப்பட்ட பல்வேறு பதாகைகளைத் தாங்கி நின்றவாறு போராட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

இதில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல்செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.இந்தப் போராட்டத்தின் பின்னர் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

மேலும் இலங்கைக்கு வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் வடக்குக்கு பயணம் செய்து செம்மணி மனிதப்புதைகுழியை பார்வையிட்டு நீதியை நிலைநாட்டுவதற்கு உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என வடகிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7,33,104)

## யுத்தத்தில்...

படும். ஆவணங்களை உறுதிப்படுத்தாவிடின் அந்த நகைகளின் ஒரு தொகை வடக்கு பொது அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும். இதற்கு பொது நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் என்று சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (05) நடைபெற்ற தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளை உரியவர்களுக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்கு பதிலளிக்கையில் சபை முதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, யுத்த காலத்தில் வடக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய சட்ட நடவடிக்கைகள் ஊடாக பொலிஸ் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த தங்க நகைகள் யுத்த காலத்தின் போது வடக்கு மாகாணத்தில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த தங்க நகைகள் இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அறிக்கை பெற்றுக்கொள்வது அவசியமாகும். அறிக்கை கிடைத்ததன் பின்னர், அவற்றை உரியவர்களுக்கு ஒப்படைப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

யுத்தகால சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த நகைகளுக்கான உரித்தை உறுதிப்படுத்துவதில் ஏதேனும் சிக்கல் காணப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். பொதுமக்களால் உரித்தை உறுதிப்படுத்த முடியாத தங்க நகைகளை வடக்கு மாகாண அபிவிருத்திக்கு பயன்படுத்தும் வகையில் பொது நிதியம் ஒன்றை ஸ்தாபிக்க உத்தேசித்துள்ளோம்.

வடக்கு அபிவிருத்திக்கு இந்த தங்க நகைகளின் ஒரு தொகையையும், அரசாங்கத்தால் ஒரு தொகையும் வைப்பிலிடப்படும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இந்த அபிவிருத்தி திட்டத்தில் பங்குபற்றுவதற்காக வாய்ப்பளிக்கப்படும் என்றார். (ம-7)

## தாளையடியில்...

காணியை தனி நபருக்கு சுவிகரிக்கும் முயற்சி நேற்று (5)அப்பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டது.

இது குறித்து தெரிய வருவதாவது,

தனியார் நிறுவனம் ஒன்று தாளையடிப் பகுதியில் அரச காணியினை அளக்க முற்பட்ட வேளை ஒரு சில மாதங்களுக்கு முன்பு அப்பகுதி மக்களால் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது.

இதன்போது குறித்த தனியார் நிறுவன அதிகாரிகள் கிராம அலுவலர், சமூக மட்ட அமைப்புகளோடு மீண்டும் கலந்துரையாடி எமது திட்டத்தின் பயன்களை எடுத்துக் கூறி கிராம மக்களின் அனுமதியுடன் குறித்த செயற்றிட்டத்தை செயற்படுத்துவதாக கூறிச் சென்றார்கள்.

இன்றுவரை கலந்துரையாடலை மேற்கொள்ளாத நிலையில் குறித்த தனியார் நிறுவன அதிகாரிகள் நில அளவைத் திணைக்களத்தினருடன் மிகவும் இரகசியமாக அரச காணியை அளப்பதற்காக தாளையடி பிரதேசத்திற்கு வருகை தந்தனர்.

இதனை அறிந்த கிராம மக்கள் கிராம மட்ட அமைப்புகளின் உதவியுடன் அப்பகுதிக்குச் சென்று கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதன்போது நில அளவைத் திணைக்களத்தினர் தாங்கள் பொலிஸாரின் உதவியுடன் வந்து மீண்டும் இந்த இடத்தை அளவீடு செய்வதாக கூறி அவ்விடத்தை விட்டுச் சென்றார்கள்.(ம-7,104)


நேரடி மற்றும் ZOOM | A/L 2027 தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்

கணக்கீடு

யாழ். கிளி மாவட்டத்தின் முன்னணி பெறுபேறுகள்

Rank 01(2018,2022 Jaf,2023 - Kili)
A/L 2024 - 02,05,10

அதிகூடிய A மற்றும் B சித்திகள் உங்கள் KBK உடன் இணைந்தால் மட்டுமே

தனிப்பாட அனுமதி உண்டு.
A/L 2025, A/L 2026 பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

KB.பாலகஜன்
B. Com(Jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in-Edu(OUSL), M.Com(HONS) Acc.Spl

புதிய அனுமதிகள்
077 452 0043 (C-3124)

KBK | கொழும்புத்துறை கந்தர்மடம் | zoom
NEC | யாழ்.நகர் | ST | மீசாலை

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237 (C-3125)

சுத்தமான , சுகாதாரமான முறையில் பறிக்கப்பட்ட தரமான வேப்பம்பூ கொள்வனவு செய்யப்படும்

கொள்வனவு விலை 1 Kg - 400/-
தேவைப்படும் அளவு 100 Kg



மொத்தமாகவோ அல்லது சிறு அளவிலோ கொள்வனவு செய்யப்படும் (C-3125)

தொடர்புகளுக்கு : 077 590 2467

கணித, விஞ்ஞான ஆசிரியர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கல்வி நிறுவனத்தில் தரம் 9, 10, 11 ஆகிய வகுப்புகளுக்கு ஆங்கில மொழி மூலம் (English medium) கணிதம் (Maths), விஞ்ஞானம் (Science) கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 538 8471, 077 312 6807 (C-3126)

உடனடி விற்பனைக்கு

புத்தம் புதிய பலட் றக்
( Hand pallet truck - 2.5 தொன் )
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
076 097 3121



எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695, 077 429 0613 (C-3123)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 91, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org